பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை



## கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

லூக்கா 2:11


செய்தி மலர்
டிசம்பர்
2023

இதழ் : 08
மலர் : 20



## சபை ஊழியரின் அன்பு மடல்



# சத்தியம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் கூறிக்கொள்ளுகிறேன்.

கடந்த நவம்பர் மாதம் முழுவதும் நம்மை கரம்பிடித்து நடத்தின கர்த்தர் வரும் டிசம்பர் மாதத்திலும் அதிசயமாய் வழி நடத்துவாராக.

இயேசு எதற்காக இந்த உலகத்தில் பிறந்தார்? என்பதைக் குறித்து பிலாத்துவிடம் கூறினார். "சத்தியத்தைக்குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்" என்றார். (யோவா-18:37)

சத்தியம் என்றால் உண்மை என்று பொருள்படும். ஆம் நம் தேவன் உண்மையுள்ளவர். நாம் உண்மையில்லாதவர்களாய் இருந்தாலும் அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார். அல்லேலூயா!

## 1. இயேசுவே சத்தியமாய் இருக்கிறார் ...

இயேசு சொன்னார் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்"(யோவா-14:6) என்று.

"பிசாசானவன் ஆதி முதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை. அவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான். (யோவா-8:44)

உலகமும் அதின் இச்சையும் சாத்தானின் சொத்து. அதை நம்பி பின்பற்றுகிறவர்கள் நரகத்திற்கு சொந்தக்காரர் ஆவார்கள். ஆனால் சத்தியமாகிய இயேசுவைப் பின்பற்றினால் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். இயேசுவின் கற்பனைகள் நம்மை பரலோக ராஜ்ஜியத்திற்கு அழைத்துச் செல்லும். இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட 312 கற்பனைகளை சுருக்கி இரண்டே கற்பனைகளாக மாற்றினார்.

" உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாயக என்பதே. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். (மத்-22:37-40)

முதலில் கர்த்தர் நம்மை நேசித்ததால்தான் மனிதனாக உலகத்திற்கு தோன்றினார். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம்" (1-யோவா-4:19) அதற்கு பிரதியுபகாரமாக நாம் சக மனிதர்களிடம் அன்பு கூற வேண்டும் இதுவே சத்தியம். இந்த கிறிஸ்மஸ் காலங்களில் பல்வேறு தேவைகளோடு கஷ்டத்தின் பாதையில் கடந்து செல்லும் சக மனிதர்களுக்கு நாம் அதிக உதவிகள் செய்வது மிகவும் அவசியமாகும். நம் தேவன் சத்தியமுள்ளவராயிருக்கிறார். நாமும் சத்தியமுள்ளவர்களாய் மாறுவோம்.

## 2. நம்மை சத்தியவான்களாய் மாற்றுகின்றார்..

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியுள்ளவராயிருக்கிறார். (1-யோவா-1:9)

ஆம் பிரியமானவர்களே, நாமும் கூட ஆண்டவருடைய கல்வாரி அன்பை எண்ணி நம்முடைய பாவங்களுக்காக அவர் பலியானார் என்பதை நினைத்து நம் பாவங்களை நாம் அவரிடம் அறிக்கை செய்து அவரோடு ஒப்புரவாகும் போது நம்மை மகனாக மகளாக ஏற்றுக்கொண்டு நம்மை சுத்திகரித்து நம்மையும் சத்தயவான்களாய் மாற்றுகிறார். அல்லேலூயா.

"நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர் மேல் உள்ள அன்பும் பிரசன்னமான போது நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து-3:4,5)

இந்த வசனம் இயேசுகிறிஸ்துவஐனுடைய உன்மையையும் அன்பையும் நமக்கு வெளிப்படுத்துகிறது.
அந்த அன்பை உணர்ந்து அவருக்காக வாழ நம்மை அர்ப்பணிப்போமாக.

## 3. <u>நம்மை கனி கொடுக்க செய்கிறார்......</u>

" உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதார சத்தியத்தை பேசுகிறவன் கர்த்தருடைய கூடாரத்தில் தங்குவான் பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்" (சங்கீ-15:1,2)

"அவன் நாவினால் புறங்கூறமாட்டான், தன் தோழனுக்கு தீங்கு செய்ய மாட்டான், தன் அயலான் மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்க மாட்டான், கர்த்தருக்கு பயந்தவர்களை கனம் பண்ணுவான், ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறமாட்டான, பணத்தை வட்டிக்கு கொடுக்கமாட்டான், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய் பரிதானம் வாங்க மாட்டான். மேற்சொன்ன அனைத்து கனிகளையும் மனதார சத்தியத்தை பேசுகிறவனுக்கு கடவுள் கொடுக்கறார்" (சங்கீ-15:1-5) எத்தனை ஆசீர்வாதங்கள் பாருங்கள்.

எனக்கன்பானவர்களே, இந்த கிறிஸ்மஸ் காலங்களில் இவைகளை அதிகமாய் தியானித்து சத்தியமுள்ள தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு சத்தியத்தின் பாதையில் நடக்க நம்முடைய ஆவி, ஆத்துமா, சரிரத்தை அர்ப்பணிப்போம்.

தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து இந்த 2023-ம் ஆண்டை வெற்றியோடு நிறைவு செய்து 2024-ஆம் ஆண்டை விசுசவாசத்தோடு பிரவேசிக்க அருள் புரிவாராக. புதிய சிந்தை புதிய நம்பிக்கை புதிய தரிசனங்களோடு புதிய ஆண்டை எதிர்கொள்வோம்

கர்த்தருடைய கிருபை உங்களனைவரோடுங்கூட இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில் அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

# தேவ செய்தி

## இரட்சிப்பை அளிக்கவே இயேசு பிறந்தார்

கிறிஸ்துவுக்குள் பிரியமான அஹமதி தமிழ் திருச்சபைக் குடும்பத்தார் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் இந்த பூமியில் வந்து மனுவுருவெடுத்த நாளையே கிறிஸ்துமஸ் பண்டிகையாக மகிழ்வுடன் கொண்டாடுகிறோம். இது வெறுமனே Xu; மகிழ்வூட்டும் கொண்டாட்டமாக மட்டும் இழந்து விடாமல் கிறிஸ்து இவ்வுலகத்திற்குள் வந்ததன் நோக்கத்தை அறிந்து கொண்டாடினால் ஆத ஓர் அர்த்தமுள்ள பண்டிகையாக இருக்கும்.

இயேசு கிறிஸ்து எதற்காக இவ்வுலகத்திற்கு வந்தார்? வேதம் விடை கூறுகிறது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். (1–தீமோ–1:15) மனிதனுக்கு அறிவை கொடுக்கவோ, பணத்தை கொடுக்கவோ, பொன்னையும் வெள்ளியையும் கொடுக்கவோ இயேசு வரவில்லை. மனிதனுக்கு இரட்சிப்பைக் கொடுக்கும்படிக்கே இயேசு இவ்வுலகில் பிறந்தார். ஆகவே தான் கர்த்தருடைய தூதன் யோசேப்பினிடத்தில் அவன் மனைவியாகிய மரியாளைக் குறித்து கூறும் பொழுது "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" (மத்–1:21)

மனிதனைப் படைத்த தெய்வத்திற்குத் தானே மனிதனின் உண்மையானத் தேவை என்ன என்று தெரியும். ஆகவே மனிதனின் உண்மையான தேவை படிப்போ பட்டங்களோ, பதவியோ அல்ல. அவனுடைய உண்மையான தேவை இரட்சிப்பு தான் என்பதை அறிந்த இயேசு அதை அருளும்படிக்கே இப்பூமியில் பிறந்தார்.

தனது உண்மையான தேவை என்ன என்பதைக் கூட உணரக் கூடாத நிலையில், பிசாசு ஜனங்களுடைய மனக் கண்களை குருடாக்கி வைத்துள்ளான். ஆகவே தான் மனிதன் எவ்வளவு சம்பாதித்தாலும் எவ்வளவு படித்தாலும் அவன் உள்ளத்தால் ஒரு வெறுமையை (emptiness) உணருகிறான். அந்த வெறுமையை உண்டாக்கியது மனிதனுடைய பாவம். அந்த வெறுமையை நிரப்பக்கூடியது இயேசு கொடுக்கிற இரட்சிப்பு மட்டுமே.

"எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களான"படியால் (ரோம–3:23) "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவையடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1–தீமோ–2:4) ஒரு மனிதன் இரட்சிப்பைப் பெறும் போது அது அவனது வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்கள் ஏராளமானவை. ஏனென்றால் பாவமானது அம்மனிதனுடைய வாழ்வில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் கணக்கிலடங்காதவை. மனிதனுடைய பாவம் அவனது வாழ்வில் பலத்த சேதங்களை உண்டு பண்ணியது உண்மை யானால், அவன் இரட்சிக்கப்படும்போது அதனால் உண்டாகும் விளைவுகளும் நிஜமானனவை. நாம் சுதந்தரித்து அனுபவிக்க

வேண்டியவை. தொடர்ந்து பாவம் உண்டாக்கிய பாதிப்புகளையும், இரட்சிப்பு ஏற்படுத்திய மாற்றங்களையும் (சிலவற்றை மட்டும்) உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

## 1.தேவனோடுள்ள உறவு:

பாவமானது மனிதனை தேவனை விட்டு பிரித்து விட்டது. அதாவது வாழ்வின் மூலாதாரத்தை (source of life) விட்டு பிரித்து விட்டது. தேவனோடு உறவாடவோ, ஐக்கியம் கொள்ளவோ இயலாதவனாய் மனிதன் ஆகிவிட்டான். இயேசுவின் மூலமாக உண்டான இரட்சிப்பானது மனிதனை தேவனோடு இணைத்து விட்டது, தேவனோடு உறவடுகிறவனாக, ஜெயிக்கிறவனாக, தெய்வீக சந்தோஷத்தையம், சமாதானத்தையும் அனுபவிக்கிறவனாக மனிதன் மாறிவிட்டான். இதற்காகவே இயேசு பிறந்தார். இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற நீங்கள் அனுதினமும் தேவனோடு உறவாடுங்கள். ஐக்கியப்படுங்கள்.

## 2.மனிதனுடைய ஆவியில் உண்டான மாற்றம்:

ஆதாமும், ஏவாளும் பாவம் செய்தவுடன் குற்ற உணர்வினால் தேவனை விட்டு ஒளிந்து கொண்டார்கள். அவர்கள் ஆவியில் உண்டான குற்ற உணர்வினால் தேவப்பிரசன்னத்தை அனுபவிக்க முடியாமல் தங்களை தேவப்பிரசன்னத்திற்கு மறைத்துக்கொண்டார்கள். (ஆதி–3:8) இயேசு கொடுக்கும் இரட்சிப்பு மனிதனுக்குள் இருக்கும் குற்ற உணர்வை நீக்கி நீதியின் உணர்வை உண்டாக்குகிறபடியால் அவன் எச்சமயத்திலும் தேவப்பிரசன்னத்தை உணரக்கூடியவனாயிருக்கிறான். இரட்சிக்கப்பட்ட தேவப்பிள்ளைகளே ஒவ்வொரு நாளும் நீதிமான் என்ற உணர்வோடு தேவப்பிரசன்னைத்தை அனுபவியுங்கள்.

## 3.ஆத்துமாவில் உண்டான மாற்றம்:

தேவன் ஆதாமினிடத்தில் நீ எங்கே இருக்கிறாய் எனக் கேட்டபோது நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன் என்றான். பாவம் செய்தவுடன் பயம் அவன் மனதை ஆட்கொண்டு விட்டது. இன்றும் ஜனங்கள் பலவிதமான பயங்களினால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். மரண பயம், தோல்வி பயம், எதிர்காலத்தைக்குறித்த பயம் ஆகிய இவையெல்லாம் பாவத்தினால் உண்டான பாதிப்புகள். பாவம் இந்த பயத்தை உண்டாக்க வல்லமையுள்ளதாய் இருக்குமானால் இரட்சிப்பு தைரியத்தைக்கொடுக்கக் கூடியதாயிருப்பது எவ்வளவு நிச்சயம். இரட்சிக்கப்பட்டவர்கள் கடினமான சூழ்நிலைகள் மத்தியிலும், பலவிதமான போராட்டங்களின் மத்தியிலும் தைரியத்தை இழக்காமல் வாழ முடியும். இரட்சிப்பின் நிச்சயம் உள்ளவர்கள் மிகுந்த மன தைரியத்துடன் பயமற்ற வாழ்க்கையை வாழமுடியும்.

## 4.விருப்பங்களில் ஏற்பட்ட மாற்றம்:

மனிதன் விரும்புகிற ஆற்றல் மிக்கவனாக படைக்கப்பட்டவன் ஆவான். நம் தேவன் விருப்பங்கள் நிறைந்தவர் ஆகவே விருப்பங்கொள்ளுவதும், ஆசை கொள்ளுவதும் தவறல்ல. எதை விரும்புகிறோம் என்பது தான் முக்கியம். பாவம் உள்ளே நுழைந்தவுடன் உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும் என சாபம் இட்ட காரணத்தினால் தெய்வீக விருப்பங்களுக்கு பதிலாக மாமிச விருப்பங்கள் கொண்டவனாக மாறிவிட்டான். மனிதன் ஆசை இச்சையாக மாறி அவனுக்கு மரணத்தை பிறப்பிக்கதாயிருக்கிறது. பாவத்தினால் சேதமடைந்த மனிதனின் ஆசையானது இரட்சிப்பின்போது தெய்வீகமானதாக மாறுகிறது. அதுவரை விரும்பினவைகளை வெறுத்து, வெறுத்தவைகளை விரும்ப ஆரம்பிக்கிறான். கிறிஸ்துவின் நோக்கத்தை நிறைவேற்றுவதையே தன் வாழ்வில் ஆசையாக கொள்கிறான்.

## 5.சரீரம் மாற்றம்:

வேதனையோடே பிள்ளை பெறுவாய் (ஆதி-3:16) என்ற சாபத்தினால் மனுக்குலத்தின் சரீரம் பாதிக்கப்பட்டு வியாதிகளும் பலவீனங்களும் மனித சரீரத்தை உருக்குலைக்க ஆரம்பித்து விட்டது. பாவம் மனிதனுக்கு வியாதியை கொடுக்குமானால் இரட்சிப்பு சரீர சுகத்தை அளிப்பது நிச்சயமாகும். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1-பேது-2:24) என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் வாழ்வில் நிஜமாகும். விசுவாசியுங்கள் அற்புதங்களை காண்பீர்கள்.

## 6.பொருளாதாரத்தில் மாற்றம்:

மனிதனுடைய பாவத்திற்கு பின்தான் வறுமை தலை தூக்கியது. தரித்திரத்தினால் பல குடும்பங்கள் அழிந்து விட்டது. இரட்சிப்பு தரித்திரத்திற்கு பதிலாக ஐசுவரியத்தை கொடுக்கமுடியும். எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மை தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பண்ணராயிருக்கிறார். (ரோம-10:12)

## 7.நித்திய ஜீவன்:

பாவமானது நித்திய மரணத்தை ஏற்படுத்தி விட்டது. அதாவது நித்தியமாக தேவன் இல்லாமல் வாழ்வது என்பது பாவத்தின் சம்பளம் என வேதம் கூறுகிறது. ஆனால் இயேசுவின் மூலம் வந்த இரட்சிப்போ நித்திய ஜீவனை நமக்குத் தருகிறது. அதாவது நித்திய நித்தியமாக தேவனோடு வாழ்கின்ற பாக்கியத்தை இரட்சிப்பு அளித்திருக்கிறது. பாவத்தினால் உண்டான பாதிப்புகளை எல்லாம் சரிசெய்யும் இரட்சிப்பை அருளவே இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்தார். அவ்வாறு மரிப்பதற்காகவே அவர் பிறந்தார் என்பதை உணர்ந்து இரட்சிப்பின் நன்மைகளை சுதந்தரித்து அனுபவிப்போமாக,

கிறிஸ்துவின் பணியில்,
L.ஜெபராஜ்
( Victory Worship Center Madurai )

## வாலிபர் பகுதி

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்.

தேவ பிள்ளைகளாகிய நமக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டு பிரதான கற்பனைகளை கைக்கொண்டு நடக்க வேண்டுமென்று மத்தேயு 23:37,40ல் பார்க்கின்ற போது முதலாவது பிரதாண கற்பனையான உன் தேனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உள் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" மேலும் இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாவது கற்பனையான "உன்னடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்று வாசிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே, முதலாவது நாம் நம்முடைய தேவனிடத்தில் முழு இருத்யத்தோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு கூற வேண்டுமென்று அண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். மனிதர்களாகிய நாம் இந்த மூன்று விதமான காரியங்கள் நம்மை நடத்துவதை காண முடிகிறது முதலாவது நம்முடைய இருதயத்தின் நினைவுகளின் படியும், நம்முடைய ஆத்தும வாஞ்சையின்படியும், நம் மனதின் எண்ணத்தின்படியும், நடக்கின்றவர்களாக காணப்படுகிறோம்.

அனுதினமும் நம் இருதயமும் மனதும், ஆத்துமாவும், நமக்காக நம்முடைய பாவங்களுக்காக, நம்முடைய அக்கிரமங்களுக்காக, நம்முடைய மீறுதலுக்காக அடிக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு நம்முடைய பரிசுத்த இரத்தத்தை நமக்காக சிந்தி, சிலுவையின் மரண பரியந்தம், தம்மை தாமே ஒப்பு கொடுத்து, நம்மை இரட்சித்து, நம்மை மீட்டுக் கொண்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசு கறிறஸ்துவின் அன்பை வெளிபடுத்துகிறதோ அல்லது இந்த உலகத்தின் மாயையான திரண்ட ஆஸ்தி, உயர்கல்வி, செல்வாக்குகளையோ? என்று நம்மை நாமே சோதித்து அறிவோம்,

பிரியமானவர்களே, 1– யோவான் 2:15,16,17ல் பார்க்கும் பொழுது உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின்

இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். பிதாவினால் உண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் என்று வாசிக்கிறோமே ஆகையால் பிரியமானவாகளே நாம் இந்த உலகத்தின் மாயைகளை மேன்மைபடுத்தும்படி எச்சரிக்கையாக இருக்கக்கடவோம்.

முதலாம் கற்பனைக்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனையாக " உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்று வாசிக்கிறோம், பிரியமானவர்களே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் நம்மை நேசிப்பது போல பிறரையும் நேசிப்பவர்களாக காணப்படவேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கிறார், (கொலேசியர் 3: 12,13) பார்க்கும் போது "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." என்று வாசிக்கிறோமே ஆகையால்

பிரியமானவர்களே பிறருடைய குறைகளை மன்னிக்கிறவர்களாகவும், நாம் காணப்பட்டு ஆண்டவருடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாக நாம் காணப்படுவோம். ஏனென்றால் மத்தேயு 7:22,23ஐ பார்க்கும் பொழுது அநேகர் இந்த உலகத்தின் மாயைகளுக்கு இடங்கொடுத்ததின் நிமித்தம், ஆண்டவருடைய வருகையில் கைவிடப்பட்டு போவார்கள் என்று பார்க்கிறோமே.

பிரியமானவர்களே நாமும் அவர்களில் ஒருவாராய் காணாதபடிக்கு இந்த பிரபஞ்சத்தின் மாயைகளுக்கு நம்மை விலக்கி ஆண்டவருடைய கற்பனைகளை நிறைவேற்றுபவர்களாக காணப்படுவோம் இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமையுண்டாவதாக.

வாலிபம் இயேசுவுக்கே

# "..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவென்.."
(ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ.பீட்டர் ராமச்சந்திரன்
செல்வி ரேச்சல் வினோத்
செல்வன்.சாமுவேல் பால் பெஸ்டஸ்
செல்வி.நயோமி வேலு ராமர்
சகோதரி.சசிகலா வேலு ராமர்
சகோதரி. மேரி ஹானி ஷீபா ராணி வெங்கடேஷ்
செல்வன்.ஜோயல் ஜஸ்டின்
சகோதரி.விஜயா ஆண்டனி
சகோ.பால் ராஜேஷ்
சகோதரி.கிளாடிஸ் பப்பி சிவக்குமார்
சகோ.சாம்சுந்தர்.
சகோதரி.சசிரேகா சத்தீஷ்குமார்
செல்வன்,டெரில் கேட்சன் ஸ்டீபன் ஜெயக்குமார்
செல்வி.ரெய்ன்ஸ் ரோஸி ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஜீனா சத்தீஷ்குமார்
செல்வி.ஜெர்ஸிலின் நியா ஜோன்ஸ்
சகோதரி.சிவகுமாரி ஜஸ்டின்
செல்வன்.சுபாஷ் சந்திரபோஸ் பாலமுருகன்

செல்வி சாயா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வி.அத்சா செல்வராஜ்
செல்வன். ஜான்சன் ராஜவேல்
சகோ.சிவக்குமார்
செல்வன்.பெஞ்சமின் வேலுராமர்
செல்வி.இவ்லின் ஸ்டெபி சகாய டார்வின்
சகோதரி.லில்லி ப்ளோரா ஆரோக்கியதாஸ்
சகோ.செல்வராஜ்
சகோ.விபின்
சகோ.ஆல்வின் முத்தையா
சகோதரி.ஜெனிபா கனீஷ் ஜோஸ்வா
சகோ.பால்ராஜ் சேகரன்
சகோ.பால் பெஸ்டஸ் ஜெயச்சந்திரன்
செல்வன்.கதிர் ஆண்டனி
சகோ.எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.கிரேஸ்லின் எட்வின் சாம் ஞானதுரை
செல்வி.ஸ்டெனா ஸ்டாலின் சுனில் வின்ஸ்
செல்வி.கவிதா கொம்மையன்
சகோதரி.ஜாஸ்மின் மெர்சி பென்சாம்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்
(ஆதி .22:18)

திருமதி.திரு தாஸ்
திருமதி.திரு ஜமிலா ஜோய்ஸ்
திருமதி.திரு கிறிஸ்டோபர் தேவராஜ்
திருமதி.திரு வேலுராமர்
திருமதி.திரு. T. ஸ்டீபன்
திருமதி.திரு R.சத்தீஷ்
திருமதி.திரு பிரசாத் சுந்தரேசன்

திருமதி.திரு ஜான்சன்
திருமதி.திரு ஆல்வின் முத்தையா
திருமதி.திரு ஜெபசிங்
திருமதி.திரு ஜெய்சாம் டேனியேல்
திருமதி.திரு செல்வராஜ்
திருமதி.திரு பால் அறிவுச்சுடர்
திருமதி.திரு பென்சாம்
திருமதி.திரு ப்ரெட்சிலின் ஜாக்சன்

# 2023 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/12/2023 | சகோ.பக்தராஜ் | சகோ.ஸ்டாலின் |
| 10/12/2023 | சகோ.பிராங்கிலின் | சகோ.அசோக்குமார் |
| 17/12/2023 | சகோ.M.கிறிஸ்டோபர் | சகோ.தாமஸ் |
| 24/12/2023 | சகோ.சுபின் சிங் | சகோ.சாம் சுந்தர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/12/2023 | சபையின் பாடகர்க் குழு ஆராதனை | |
| 8/12/2023 | பிறசபைகள் பாடகர் குழு ஆராதனை | |
| 15/12/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22/12/2023 | சகோ. பிரசாத் | சகோ.ஜெகநாதன் |
| 29/12/2023 | சகோ.வில்சன் | சகோ. ஆரோக்கியதாஸ் |

25/12/2023 அன்று கிறிஸ்துமஸ் ஆராதனை

இடம் – அஹமதி தமிழ் திருச்சபை

( நேரம் பின்னர் அறிவிக்கப்படும் )

31/12/2023 அன்று விழிப்பு இரவு ஆராதனை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

01/01/2024 அன்று புது வருட ஆராதனை

இடம் – அஹமதி தமிழ் திருச்சபை

( நேரம் பின்னர் அறிவிக்கப்படும் )

# 2023 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. --------தரித்தது----------------நின்றது?
2.. ------- எப்பிராயீமுடையது, ------- மனாசேயினுடையது?
3.உங்கள்--------------- மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்?
4. புத்திமானாய் நடந்துகொள்ள எதை, எப்படி தியானிக்க வேண்டும்?
5. யோசுவா யாரை ஆசீர்வதித்து எதை சுதந்தரமாக கொடுத்தார்?
6. யாருக்கு எது நினைப்பூட்டும் அடையாளமாக வைக்கப்பட்டது?
7. யாருக்கு விரோதமாக எவனும் தன் நாவை அசைக்கவில்லை?
8. திம்னாத் சேராவில் அடக்கம் பண்ணப்பட்டது யார்?
9. முதல் மாதம் பத்தாம் தேதியிலே எங்கு பாளயமிறங்கினார்கள்?
10. எதையெல்லாம் கைக்கொள்ள நிர்ணயம் பண்ணவேண்டும்?
11. எகிப்தின் நிந்தையை இராதப்படிக்கு புரட்டிப் போட்ட ஸ்தலம் எது?
12. எதற்கு ஏத் என்று பேரிட்டார்கள்?
13. எது கர்த்தருக்கு பரிசுத்தமானவை?
14. முழு கற்களால் என்ன கட்டப்பட்டது? எங்கு கட்டப்பட்டது?
15. எவர்கள் குணமாகுமட்டும் பாளயத்தில் தங்கியிருந்தார்கள்?

விடைகளை வருகின்ற 20-12-2023க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் "யோசுவா" அதிகாரம் முழுவதிலும் பதிலை கண்டுபிடிக்கவும்.

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

# 2023 – நவம்பர் மாத வேத வினாவுக்கு விடை

1. இயேசு – லூக்கா 3: 21 –
2. இயேசு – லூக்கா 18: 1
3. இயேசு – லூக்கா 19: 10 –
4. நாயீன் ஊர் விதவையின் மகன் – லூக்கா 7: 11,15
5. லாசரு – லூக்கா 16: 20,21 –
6. சிமியோன் – லூக்கா 2: 29
7. இயேசு – லூக்கா 4: 46 –
8. லூக்கா 1: 31ல்
9. மார்த்தாள் – லூக்கா 10: 40 –
10. தேவதூதன் – லூக்கா 1: 37
11. பானுவேல் – லூக்கா 2: 36,37 –
12. இளைய குமாரன் – லூக்கா 15: 18,21
13. இளைய குமாரன் – லூக்கா 15: 20 –
14. சீஷர்கள் – லூக்கா 24: 30,31
15. லாசரு – லூக்கா 16: 22, 23

## 2023– நவம்பர் மாத வேத வினாவுக்கு

## பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.ஜெஸ்டெட் வர்கீஸ்
Sis.நித்யா ஜோன்ஸ்
Bro.எட்வின் சாம் ஞானதுரை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் இனிய நல் வாழ்த்துக்கள். மீண்டுமாக, இச்செய்தி மலரின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

**<u>ஏழைக்கு இரங்குதல்</u>: (நீதி-19:17)**

"ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான், அவன் கொடுத்ததை திரும்பக்கொடுப்பார்"

நன்மை செய்ய நமக்குத் திராணி இருக்கும்போது அதை செய்யத்தக்கவர்களுக்கு நாம் செய்யாமல் இருக்கக் கூடாது. நாம் நம் வேலை ஸ்தலத்தில் அல்லது நம் வீட்டினருகில் சபையில் பொருளாதார நிலையில் கஷ்டபப்படுவர்களுக்கு நாம் பண உதவியோ, பொருள் உதவியோ நாம் செய்ய வேண்டும். அதுவே, கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை நாம் உண்மையாக கொண்டாடுவதாகும்.

**<u>தேவன் நம் உள்ளத்தில் பிறப்பதன் அவசியம்</u>:**

இயேசுவுக்கு நம் இருதயத்தைக் கொடுக்க வேண்டும். நாம், நம் பாவத்தை விட்டு இரட்சிப்பை பெற வாஞ்சிக்க வேண்டும்.

" மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்-16:26)

நமக்கு ஜீவனைத் தருபவர் அவரே. நம் ஆத்துமாவை நாம் நஷ்டப்படுத்தி விடக்கூடாது.

அவர் நம் உள்ளத்திலும், இல்லத்திலும் பிறக்க வேண்டும். தேவன் பாவியை நேசிக்கின்றார். ஆனால் பாவத்தை வெறுக்கின்றார். ஏழைகளுக்கு நாம் உதவுவதும், கிறிஸ்து நம் உள்ளத்தில் பிறப்பதுமே, இந்த கிறிஸ்மஸ் பண்டிகையை நாம் உண்மையாகவே கொண்டாடுவதற்கு சமமாகும்.

**<u>பந்தியை ஆயத்தப்படுத்துதல்</u>:**

"என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது." (சங்கீ-25:5)

இந்த வருடத்தின் துவக்கம் முதல் முடிவு வரை நம்மை பாதுகாத்த, நம் தேவாதி தேவனுக்கு முதலாவது நாம் நன்றிகளை தெரிவித்துக்கொள்வோம். இந்த வருடக் கடைசி நாட்களில் நாம் ஆண்டவருக்கு பிரியமாக வாழ்ந்தால் நம் சத்துருக்களையும் நம்மிடம் சமாதானமாகும்படி செய்து, அவர்கள் கண்களுக்கு முன்பாகவே நம் தலையை உயரச் செய்வார். நமக்கு ஒரு பந்தியையும், அவர் ஆயத்தம் செய்வார். புறங்கூறித் திரிகின்ற நபர்களிடமிருந்து நம்மை விலக்கிக் காப்பார். நீதி நியாயமற்ற ஜனங்களின் மத்தியிலும், அவருடைய ஜனங்களைப் பிரித்தடுப்பார். வருகின்ற புதிய ஆண்டிற்குள்ளாக நாம் செல்லும் முன்பாக நம்மையே அவரிடம் அர்ப்பணித்து தனி ஜெபம் வேதவாசிப்பின் மூலமாக நாம் நம்மை ஆயத்தப்படுத்துவோமாக!

தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
A.பியூலா மெர்ஸிபால்

## மிஷனரி செய்திகள்

### இசபெல்லா வயட்

பேராயர் கால்டுவெல்லின் அன்பு மகள் இசபெல்லா, இசபெல்லா பத்து வயது சிறுமியாக இருந்த போது பெற்றோருடன் இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கு பெற்றோரை விட்டுத் தனியாகச் சென்று விட்டாள்.

பெற்றோர் இசபெல்லாவை கலக்கத்துடன் தேடினர். இசபெல்லா தனியாக நிற்பதைக் கண்ட ஒருவர் அவரிடம் உன்னுடைய ஊர் எது? என்று கேட்டார். அதற்கு இசபெல்லா இடையன்குடி என்று பதில் அளித்தார்.
இடையன்குடி ஆலயம் கட்டுவதில் பெரும் பங்கு வகித்தவர் இசபெல்லா. தன்னுடைய தகப்பனாரின் அனுமதி பெற்று அநேகருக்கு கடிதம் எழுதி இடையன்குடி ஆலயம் கட்டப்பட பணம் சேகரித்தார்.
இளவயதிலேயே பாடகர் குழுவிற்கு பாடல் கற்றுக் கொடுத்து அதை நடத்தினார்.

இசபெல்லா 1868 பிப்ரவரி 19ம் தேதி வயட் என்ற மிஷனெரியை மணந்தார். வயட் முதலில் இடையன்குடியிலும் பின்பு 1880 முதல் 1895 வரை திருச்சியிலும் தம்முடைய மனைவி இசபெல்லாவுடன் இணைந்து ஊழியம் செய்தார்.

இசபெல்லா முதலாவது திருச்சியில் செய்த பணி பெண்கள் பள்ளியைத் துவக்கினார்.வயட் ஒரு ஆண்கள் போர்டிங் பள்ளியைத் துவக்கினார். அதுவே இன்று திருச்சியில் உள்ள பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளி.

1891ம் ஆண்டு நவம்பர் 1ம் நாள் புத்தூர் சகல பரிசுத்தவான்கள் தேவாலயத்துக்கு இசபெல்லா வயட் அஸ்திபாரமிட்டார். அஸ்திபாரமிடும் அந்த ஆராதனையை அவருடைய கணவர் வயட் ஐயர் நடத்தினார்.

இசபெல்லா வயட் தாம் தம் தந்தையோடு இணைந்து இடையன்குடி ஆலயத்தைக் கட்ட உறுதுணையாய் இருந்ததுபோல தம் கணவர் வயட்டோடு இணைந்து திருச்சி, புத்தூர் சகல பரிசுத்தவான்கள்

ஆலயத்தைக் கட்ட உறுதுணையாய் இருந்தார். இங்கிலாந்திலும், இந்தியாவிலும் உள்ள தம்முடைய நண்பர்களுக்குக் கடிதம் எழுதி பணம் திறட்டித் தந்தார். 1895ம் ஆண்டு அவர்கள் தங்கள் தாயத்திற்குச் செல்லுமுன்னே பேராயர் ஜெல் அவ்வாலயத்தைப் பிரதிஷ்டை செய்தார்.

நம் சபையில் இசபெல்லாதான் கிறிஸ்மஸ் மர விழாவை 1864ல் தொடங்கித் தந்தவர். அந்தப் பழக்கம் திருநெல்வேலியிலிருந்து பிற இடங்களுக்கும் பரவியது.

சிகிச்சையளிக்க வந்தார். அதற்குள் அந்த வாலிபன் மரித்துப் போயிருந்தான். அந்த வாலிபன் டாக்டர் சாமுவேலின் சொந்த மகன்.

அந்த வாலிபனைக் கொண்டு வந்தது அவருடைய மனைவி. தன் மகனுக்காய் கண்ணீர் விட்டுக் கதறினார்.

தங்கள் குடும்பத்தைவிட மற்றவர்களை நேசித்த இப்படிப்பட்டவர்களால்தான் இன்றைக்கும் கிறிஸ்தவ மார்க்கம் வளர்கின்றது.

நம்மை நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரத்தில் இருக்கின்றோம். தங்களையே மேய்க்கின்ற மேய்ப்பர்கள் பெருகிக் கொண்டு இருக்கின்ற காலம் இது.

தளர்ந்த கைகளை திடப்படுத்தி, தள்ளாடுகிற முழுங்கால்களைப் பலப்படுத்துங்கள் மனம் பதறுகிறவர்களைப் பார்த்து நீங்கள் பயப்படாதிருங்கள். திடன் கொள்ளுங்கள் இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள் ( ஏசாயா –35:3,4 )

தேவனுடைய ஜனங்களை நேசிக்கின்ற ஊழியர்களை தேவன் எழுப்பித் தரும்படியாய் ஜெபிப்போம். கல்வாரி சிலுவையன்பைக் காண்பிக்கின்றவர்கள் எழும்பட்டும், நாமும் நம்முடைய சகோதரர்களுக்கு ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாக இருக்கின்றோம் என்ற வசனத்தின்படி ஜீவனைக் கொடுக்கும் அன்புடைய மேய்ப்பர்கள் எழும்ப ஜெபிப்போம்.

மனதுருக்கம் உள்ளவர்கள் தெய்வீக அன்பினால் தங்கள் இருதயத்தை நிரப்பியவர்கள் மட்டுமே தேவனின் அன்பை வெளிப்படுத்த முடியும். திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல் இருந்ததால் இயேசுகிறிஸ்து அவர்கள் மேல் மனதுருகினார். அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டிக் கொள்ளச் சொன்னார்.ஜெபிப்போம், மனதுருக்கமுள்ள ஊழியர்களைத் தேவன் தருவார்.

# Kids Corner

**MERRRY CHRISTMAS TO ALL!**

M - MIRACLE
E - ETERNAL LIFE
R - REDEMPTION
R - REPENTANCE WHEN
Y - YOU YIELD TO GOD

C - CHRIST IS
H - HOLY
R - RIGHTEOUS KING
I - IMMANUEL
S - SON OF GOD
T - TRUTH
M - MESSIAH
A - ALMIGHTY
S - SAVIOR

T - TRUE VINE
O - OMEGA

A - ALWAYS
L - LOVING
L - LORD

JOEL JESTINE

## Christmas gift!

Hurray Huray Christmas has come!
Lots of gifts to come and carols to come
Smiling and laughing faces all around
Christmas trees and ornaments all around

Santa Claus is here in town
Wearing red and white
With a heavy gift bag
Giving gifts to the young and old

Forget not the best gift for Christmas
Is Christ in heart of man

Hannah Menora

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில






























# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. டி.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.டி.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.டி.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL
Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only